Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 28, 2024

வெள்ளிக்கிழமை ஜூன் 28, 20… | ஒளி: 09 கதிர்: 283 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## “அத்தியாவசிய சேவையாக மாறும்”

நாட்டின் பிள்ளைகளின் கல்விக்காக ஆசிரியர்கள் கண்டிப்பாகக் காலை வேளையில் பாடசாலைகளில் இருக்க வேண்டும் எனவும், பாடசாலை மாணவர்கள் கல்வியை இழந்தால் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி, மாநாயக்க தேரர்களை வியாழக்கிழமை (27) சந்தித்து ஆசீர்வாதம் (27) பெற்றுக்கொண்டார். இதன்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



## “அரசியலமைப்புக்கு புறம்பாக செயற்படாது”

**ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் எங்களுக்கு ஏற்பட்ட வெளிநாட்டு நிதி பிரச்சினைகளால் நாங்கள் எதிர்கொண்ட சூழ்நிலையை நினைவில் கொள்ள வேண்டும்**

தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் அரசியலமைப்பிற்குப் புறம்பாக செயற்படாது என அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். நிலையான அரசாங்கத்தை அமைப்பதற்கு முதலில் அரசியலமைப்பு ரீதியிலான ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். அடுத்த வருடம் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கடன் மறுசீரமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை

இலங்கைக்கான நீடித்த நிதி வசதி திட்டத்தினை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்த நிலையில் இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்கள் மத்தியில் இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பதற்கான பேச்சுகளை முன்னெடுக்கும் நோக்குடன் 2023 ஏப்ரல் 13ஆம் திகதி உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் சபையானது (OCC) ஸ்தாபிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### 80 இலட்சம் ரூபாய் நகை, பணம்

## அடகுக் கடையில் மோசடி: முகாமையாளருக்கு சிறை

தனியார் அடகுக் கடையொன்றில் அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளில் சுமார் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள், பணம் உள்ளிட்டவற்றை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் அந்த அடகு நிலையத்தில் மேலாளராகக் கடமையாற்றிய நபர், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2







## ஜனாதிபதி ரணில் கண்டியில் வழிபாடு

கண்டிக்கு, வியாழக்கிழமை (27) விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அத்துடன், மல்வத்து மாநாயக்க, அஸ்கிரிய மாநாயக்க ஆகியோரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர், கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்துக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அங்கு இடம்பெற்ற சிறப்புப் பூஜைகளிலும் கலந்துகொண்டார். அத்துடன் மீரம் மக்கம் பள்ளிவாசலுக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

மல்வத்து மகா விகாரையின் மகாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி மகா விகாரை மகாநாயக்க வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை அடைந்துள்ள பொருளாதார மற்றும் நிதி முன்னேற்றம் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தினார். அத்துடன், கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தையும் மாநாயக்கர்களிடம் கையளித்தார்.

### “கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டில்

## பிரச்சினைகள் உள்ளன”



சர்வதேச நாணய நிதிய (IMF) திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து பல விடயங்கள் புதன்கிழமை (26) வெளிப்படுத்தப் பட்டன. கடன் மறுசீரமைப்பு செயல்முறை நாட்டிற்கு நன்மை பயக்கும் என்றால்,

தொடர்ச்சி P2

## “வார இறுதி விடுமுறையில் வேலை செய்யோம்”

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கிராம உத்தியோகத்தர்கள் புதன்கிழமை (26) ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பு, மூன்று நாட்களுக்குத் தொடரும் என அறிவித்துள்ளனர். போக்குவரத்து, எரிபொருள், சீருடை மற்றும் தொடர்பாடல் ஆகிய கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரியே இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இந்த பிரச்சினைகள் தொடர்பில் பல ஆண்டுகளாக எங்கள் கூட்டணி கலந்துரையாடி வருகிறது, ஆனால் எங்கள் பிரச்சினைகளுக்கான

தொடர்ச்சி P2





## மாணவனின் வயிற்றை கிழித்த இரண்டடி தடி மீட்பு

ஏ.எல்.எம்.ஷினாஸ்

பனை மரத்திலிருந்து கீழே தவறிவிழுந்த போது, பாடசாலை மாணவனின் வயிற்றில் குத்திய இரண்டடி நீளமுள்ள தடி மீட்கப்பட்டுள்ள சம்பவமொன்று கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை வடக்கு ஆதர வைத்தசாலையில் உயிருக்குப் போராடிய நிலையில், விபத்தில் சிக்கிய இளைஞன் அவசர சிகிச்சைப் பிரிவில் செவ்வாய்க்கிழமை (25) அனுமதிக்கப்பட்டார். பல மணி நேர அவசர சத்திர சிகிச்சையின் பின்னர் குறித்த இளைஞன் உயிர் பிழைத்த சம்பவம் கல்முனையில் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## மலையக சமூக குடும்பங்களை பிரஜைகளாக்கும் கொள்கை தயார்

பெருந்தோட்ட பிரதேசங்களில், நவீன அடிமைத்துவ அம்சங்களுக்கு மத்தியில், மலையக சமூக குடும்பங்கள் வாழ்கின்றன. இம்மக்களுக்கு பெருந்தோட்ட நிலங்களில், வதி விடக் காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றுத் தந்து அவர்களை இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையைத் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுப்பதாக அறிவித்துள்ளது.




தொடர்ச்சி P2

## சீனாவில் மஹிந்த

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வியாழக்கிழமை (27) சீனாவுக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சீனப் பிரதமர் லீ கியாங், வெளிவிவகார அமைச்சர் வாங் யீ ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அரசியலமைப்புக்கு புறம்பாக செயற்படாது”

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஸ்திரமற்ற நிலையிலிருந்த நாட்டை தற்போதைய ஜனாதிபதியால் ஸ்திரப்படுத்த முடிந்துள்ளதாகவும் அதனால் தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கொழும்பில் புதன்கிழமை (26) பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

தேர்தல் ஒத்திவைக்கப்படுமா என்ற விவாதம் நாட்டில் நிலவி வருகிறது. அத்துடன், பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது குறித்தும் கலந்துரையாடப்படுகிறது.

ஆனால், அரசாங்கம் என்ற ரீதியில் நாம் முதலில் ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்பதை முதலில் கூற வேண்டும். அரசியலமைப்பு ரீதியாகத் தேவையானது ஜனாதிபதி தேர்தல். நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்படும் போது, அது நேரடியாக மக்களைப் பாதிக்கிறது. எனவே இந்த நாட்டுக்கு நிலையான அரசாங்கம் தேவை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுத் தேர்தலை நடத்தலாம். அரசியலமைப்பிற்குப் புறம்பாக செயற்பட்டுத் தேர்தலை ஒத்திவைக்க நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் உள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் 2022ஆம் ஆண்டு மே மாதம் இந்த நாட்டிலிருந்த நிலைமையை நாம் அனைவரும் புரிந்து கொண்டோம். மக்கள் வீதிகளில் எரிபொருள் வரிசை மற்றும் எரிவாயு வரிசையில் நின்று கொண்டிருந்தனர். ஒரு காலத்தில் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் போனது. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையால் எங்களுக்கு ஏற்பட்ட வெளிநாட்டு நிதி பிரச்சினைகளால் நாங்கள் எதிர்கொண்ட சூழ்நிலையை நினைவில் கொள்ள வேண்டும்.

அப்போது ரணில் விக்ரமசிங்க அவர்கள் மட்டுமே சவாலை ஏற்றுக்கொண்டார். ரணில் விக்ரமசிங்கவிற்கு பாராளுமன்றத்தில் சிறு குழுவாக நாங்கள் உதவி செய்தோம். அனுபவத்துடனும், முதிர்ச்சியுடனும், சவால்களை ஏற்கும் திறமையுடனும் அந்த வேலையைச் செய்வார் என்று நாங்கள் நம்பினோம்.

இரண்டு வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கும் போது, நாம் எதிர்பார்த்ததைச் செய்திருக்கிறார். இப்போது ரணில்தான் ஆள் என்ற கருத்து கிராம மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அப்படியானால், அன்று நாங்கள் எடுத்த முடிவு சரியானது என்று நினைக்கிறோம்.

நாட்டுக்கு நல்ல செய்தியைக் கூறும்போது, இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு நம்பிக்கையுள்ள மனிதனும் நல்லதைக் காண்கிறான். அதை நாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்னொரு கூட்டத்தினர் நல்ல செய்தி சொன்னால் அதை பாசாங்குத்தனத்துடன் பார்க்கிறார்கள்.

இந்த போஸ்ட்டர் மூலம், நாட்டை நேசிக்கும் மக்களுக்கும், இந்த நாட்டை அழிக்க நினைக்கும் மக்களுக்கும் இடையிலான பிரிவினையை நாம் தெளிவாகக் காண்கிறோம்.

சில எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணியைப் போல, ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் தலைவர்கள் தொழிற்சங்கங்களின் தலைவர்கள், நாடு நன்றாக இருக்கும் நேரங்களில் எப்போதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2023 மார்ச்சில் IMF ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு முதல் தவணையைப் பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, இது போன்ற வேலைநிறுத்த அலைகளை ஏற்படுத்தியது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கிய நேரத்தில், கொவிட் தொற்றுநோய் காரணமாக நாட்டை மூட வேண்டியிருந்தது.

நாட்டை திறந்துவிட்டு சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியதும் தொழிற்சங்கத்தினர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து அவர்களை வரவிடாமல் தடுத்தனர். இன்று ஒரு நல்ல செய்தி வரவிருக்கும் நேரமும் இவ்வாறு செய்கின்றனர்.

அதை அழித்து வேறாக மாற்ற வேண்டும் என்று இன்று வேலை நிறுத்த அலை நடத்தப்படுகிறது. கடந்த காலத்தில் இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் அரச ஊழியர்கள் சில சிரமங்களுக்குள்ளாகியிருந்ததாக நான் நம்புகிறேன். ஆனால், கொவிட் தொற்றுநோய்களின் போது நம் நாட்டின் தனியார்த் துறை கூட சரிந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஊழியர்களின் சம்பளம் கூட குறைக்கப்பட்டது. ஆனால், அரசு அதைச் செய்யவில்லை. அரசு அரச ஊழியர்களை முடிந்தவரை பாதுகாத்தது என்றார்.

# அடகுக் கடையில் மோசடி: முகாமையாளருக்கு சிறை

ஹட்டன் மல்லியப்பு நகரில் உள்ள தனியார் அடகுக் கடை ஒன்றில் பணிபுரிந்த முகாமையாளர் ஒருவர் ஹட்டன் பொலிஸ் பிரிவின் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதவான் எம். பருக்தீனின் முன்னிலையில் புதன்கிழமை (26) முன்னிறுத்தப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். .

சந்தேகநபர் மேற்படி அடமான நிலையத்தில் முகாமையாளராக பல வருடங்கள் பணிபுரிந்துள்ளார் என்பதும், குறித்த அடமான நிலையத்தின் உரிமையாளர் வெளிநாட்டிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் நாடு திரும்பி, நகைகள், பண விபரங்களைத் தேடிப்பார்த்த போதே, மோசடி அம்பலமானது.

அதன்பின்னர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அந்த அடகு நிலையத்தின் முகாமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டார்.

## “பிரச்சினைகள் உள்ளன”

அதற்கு ஆதரவை வழங்குவோம். என்றாலும், நேற்றைய தினம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், களுத்தறை, புலத்சிங்கல மதுராவல, ரெமுன மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூன் 27ஆம் திகதி இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 2028 வரை கடனை செலுத்துவதற்குக் கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. 2028 முதல் கடன் தவணைகளைச் செலுத்த வேண்டும். இது ஒரு நல்ல விடயம் போல் தெரிந்தாலும், IMF இன் 2023 மார்ச் அறிக்கை கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின்படி, நாம் 2033 முதலே கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். IMF அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த இணக்கப்பாட்டுக் கலந்துரையாடலினால் 2033 இலக்கை எட்ட முடியாது போயுள்ளது. 2028ஆம் ஆண்டு முதல் கடன் தவணைகளைச் செலுத்துவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும், சகல நாடுகளையும் விட நமது நாடு கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை வேகமாக பூர்த்தி செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது முற்றிலும் தவறான கருத்தாகும். எமது நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை இன்னும் முடிவடையவில்லை. செயல்முறையை முழுமைப்படுத்தாமல் இவ்வாறு பட்ட பொய்யை மக்களிடம் சொல்வது தவறாகும். எம்மை விட வேகமாக தங்கள் கடனை மறுசீரமைப்புச் செயல்முறையை முழுமையாக மறுகட்டமைத்த பல நாடுகள் உள்ளன.

கானா போன்ற நாடு முன்னெடுத்த விரிவான கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் அந்நாட்டின் மொத்த கடனில் 37% குறைப்பை, வெட்டைச் செய்துகொள்ள முடிந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில், நமது நாட்டில் வட்டி குறைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. வட்டியையும் கந்துவட்டியையும் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு நாடாக நாம் ஒரு முழுமையான இணக்கப்பாட்டை எட்டவில்லை. சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் அடங்களாக சர்வதேச வணிககடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை. இந்த கலந்துரையாடல்கள் ஜூலை 3ஆம் திகதி வரை தொடர்கிறது. இறுதி இணக்கப்பாடு எட்டப்படா விட்டால், எமது நாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரவும் குறித்த தரப்பினர் தயார் நிலையில் உள்ளனர்.

கானா நிதி அமைச்சர் தனிப்பட்ட முறையில் சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுதான், கானா நாடு எமது நாட்டை விட வேகமாக ஒரு விரிவான ஒப்பந்தத்தில் நுழைந்ததற்கு வழிவகுத்த காரணமாகும். எமது நாட்டின் நிதியமைச்சர் அவ்வாறான கலந்துரையாடலுக்குச் செல்லவில்லை. இதனால் அரசாங்கம் பொய்யுரைத்து வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## “வார இறுதி விடுமுறையில்...

ஆனால், எங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்ந்து தாமதமாகின்றன என கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகக் கிராம உத்தியோகத்தர்கள் மூன்று நாட்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈட்டுப்பட்டுள்ளனர் என்றார்.

இதேவேளை, வார இறுதி நாட்கள் மற்றும் விசேட அரச விடுமுறை நாட்களில் வேலை செய்யப் போவதில்லை. எங்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் பதில் அளிக்காவிட்டால், மாவட்ட அளவில் போராட்டம் தொடரும் என கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## சீனாவில் மஹிந்த...

பெய்ஜிங்கில் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகளின் 70ஆவது ஆண்டு நினைவு விழாவில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த நினைவு நிகழ்வுகளில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரதமர் லீ கியாங், வெளியுறவு அமைச்சர் வாங் யி மற்றும் இதர முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வுகளின் ஒருபுறம், பிரதமர் லீ கியாங் மற்றும் அமைச்சர் யீ ஆகியோருடன் பரஸ்பர கலந்துரையாடல்களில் ஈடுபடும் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கு நன்மை பயக்கும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடுவார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் குறித்தும் ராஜபக்ஷ, விவாதிப்பார் மற்றும் சீனா மற்றும் சீனாவின் எக்சிம் வங்கி அளித்த உதவிக்குத் தனது நன்றியைத் தெரிவிக்கவுள்ளார்.

சிங்கப்பூர் வழியாக பெய்ஜிங் சென்ற ராஜபக்சே, ஜூலை 1ஆம் திகதி நாடு திரும்புவார்.

## மலையக சமூக குடும்பங்களை...

இலங்கை ஐ.நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான தூதுக்குழுவுக்கும் இடையில் தீர்க்கமான சந்திப்பு கொழும்பில் வியாழக்கிழமை (27) இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு எடுத்துரைத்துள்ளார்.

இதன் போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் தமுகூ/ஜமமு கேகாலை மாவட்ட அமைப்பாளர் எம். பரணிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு கருத்து கூறிய போது தெரிவித்துள்ளதாவது,

அடுத்து வரும் ஆட்சி மாற்றத்தை அடுத்து, இது ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் முறை மாற்றமாகப் பரிணமிக்க வேண்டும். அதற்கான முன் தயாரிப்பு பணிகளில் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். இந்த விவகாரங்கள் தொடர்பான உள்நாட்டு அரசியல் சட்டவாக்க நடவடிக்கைகளைத் தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள்ளும். அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதை விட, முன்கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

# கடன் மறுசீரமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை

அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட பல சுற்றுப் பேச்சுக்களை அடுத்து 2024 ஜூன் 26ஆம் திகதி OCC ஆனது புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தது. தனது பொருளாதார ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகவும் மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சியை நோக்கிய உறுதியான நகர்வினை மேற்கொள்வதற்காகவும் இலங்கை மேற்கொண்ட வலுவான முன்னேற்றகரமான செயற்பாடுகளை இம்மைல்கல் நிரூபிக்கின்றது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து OCCக்கு இணைத்தலைமை வகிக்கும் இந்தியா, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, மற்றும் ஸ்திரத்தன்மையில் வலுவான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது. இந்த உறுதிப்பாடானது இந்தியாவால் முன்னொருபோதும் இல்லாத வகையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட 4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஆதரவு மூலமும் நிரூபிக்கப்பட்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதி உத்தரவாதங்களை வழங்கிய முதல் கடன் வழங்கும் நாடு இந்தியாவாகும், இதனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தைப்பெற இலங்கைக்கு வாய்ப்பு கிடைத்தது.

முக்கிய பொருளாதாரத் துறைகளில் நீண்டகால முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவிப்பதன் ஊடாக இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவினை வழங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# மடு அன்னையின் ஆடி மாத திருவிழா குறித்து கலந்துரையாடல்

எஸ்.ஆர்.லெம்பேட்



மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் வியாழக்கிழமை (27) காலை 11 மணியளவில் மடுத்திருத்தல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார்,மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார்,பிரதேச செயலாளர்கள்,திணைக்கள தலைவர்கள்,பொலிஸ், கடற்படை மற்றும் ராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். குறிப்பாக சு காதாரம்,போக்குவரத்து,குடிநீர்,மின் சாரம்,பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ் சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுக்கவுள்ளனர். இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மரு அன்னையின் ஆசி பெற வருகை தர உள்ளமையினால் சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்த அமையும் குறிப்பிடத்தக்கது.

# மாணவனின் வயிற்றை கிழித்த இரண்டடி தடி மீட்பு

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கல்முனை நாவிதன்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பாடசாலை மாணவன் நுங்கு பறிப்பதற்காகப் பனை மரத்தில் ஏறிய போது தவறி விழுந்துள்ளான்.

இந்நிலையில், குறித்த இடத்தில் பயற்றைச் செடிக்கு நாட்டப்பட்டிருந்த கிளிசரியா மரத்தின் கம்பு குறித்த இளைஞரின் குத வழியாகப் பாய்ந்து சலப்பை, ஈரல், நுரையீரல், பிரிமென்தகடு உட்பட உடலின் முக்கிய பாகங்களாகக் காணப்படுகின்ற 15 பாகங்களைக் கிழித்துக் கொண்டு மார்பக பக்கமாகக் குறித்த தடி வெளியில் தெரிந்துள்ளது.

உயிருக்குப் போராடிய மாணவன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சம்பவத்தைக் கேள்வியுற்று அவசர சிகிச்சைப் பிரிவுக்கு விரைந்து சென்ற மருதமுனையை சேர்ந்த பிரபல அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர் டொக்டர் ஏ.டபுள்யூ.எம்.சமீம் தலைமையிலான வைத்திய குழுவினர் குறித்த இளைஞரின் உயிருக்கு ஆபத்து இல்லாத வகையில், பல மணி நேர நீண்ட அறுவை சிகிச்சையின் பின்னர் இரண்டடி நீளமுடைய தடியை வயிற்றுப் பகுதியிலிருந்து வெற்றிகரமாக அகற்றியுள்ளனர். தற்போது குறித்த இளைஞன் ஆரோக்கியமான நிலையில் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் வெற்றிகரமாகச் செய்யப்பட்ட இந்த சத்திர சிகிச்சை குறித்து வைத்திய நிபுணர் ஏ.டப்ளியு.எம்.சமீம், ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

“எனது 25 வருட கால அறுவை சத்திர சிகிச்சை வரலாற்றில் இது ஒரு சவாலான அறுவை சிகிச்சையாகும். இதற்கு முன்னர் இது போன்ற ஓர் அறுவை சிகிச்சை இலங்கையில் எங்கும் நடைபெற்றதாக நான் அறியவில்லை. எனது மேலதிகாரியின் ஆலோசனையைப் பெற்று நம்பிக்கையுடன் இந்த சத்திர சிகிச்சையை முன்னெடுத்தேன் இறைவன் உதவியால் வெற்றிகரமாகச் செய்ய முடிந்துள்ளது

குறித்த அறுவை சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு என்னுடன் ஒத்துழைப்பு வழங்கிய வைத்திய பணிப்பாளர் உள்ளிட்ட வைத்திய குழுவினர், அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்” என்றார்

# "வேலைக்கு செல்லுங்கள்"



அனைத்து பாடசாலை மாணவர்களின் நலன்களையும் கருத்திற்கொண்டு வெள்ளிக்கிழமை(28) பணிக்கு சமூகமளிக்குமாறு, பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிடம் பதில் கல்வி அமைச்சரும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வியாழக்கிழமை (27) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் ஆசிரியர் பணிப்பகிஷ்கரிப்பு இன்றி மாணவர்களுக்குத் தொடர்ச்சியான கல்வியை வழங்கி வருகிறது. இந்த ஆசிரியர் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக அந்த பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்குத் தீர்வாக 2022ஆம் ஆண்டு குழுவொன்று நியமிக்கப்பட்டு தரம் iii 2 இன் சம்பளம் 14 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாதாந்தம் 3,750 ரூபாவினால் சம்பளம் அதிகரிக்கப்படுகிறது.

தரம் 1இன் சம்பளம் 26 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த தரத்தின் சம்பளம் 17,720.00 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில் முழு அரச சேவையினதும் சம்பளம் 10,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்த சம்பள அதிகரிப்பானது ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும்.

அத்துடன், 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படும் என தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் எந்த அரசாங்கமும் கடன் பெறுவதற்கோ அல்லது பணம் அச்சிடுவதற்கோ திறைசேரியினால் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டி உள்ளார்.

## "சமநிலையை அடைவது சவாலான விடயமாகும்"





கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், இலங்கை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து முதலாவது இலங்கை மூலோபாய வர்த்தக மன்றத்தினை ஜூன் மாதம் 26ஆம் திகதி ஆரம்பித்து வைத்தது.

வர்த்தகப் பாதுகாப்பின் முக்கியமான அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காகவும் மற்றும் உலகளாவிய வர்த்தக மையங்களுக்கான போட்டி நடைமுறைகளின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காகவும் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த பல்வேறுபட்ட தரப்பினர்களையும் இந்நிகழ்வு ஒன்று சேர்த்தது.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் ரி.ரி.உபுல்மலி பிரேமதிலகவின் வரவேற்புரையினைத் தொடர்ந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த வர்த்தகக் கட்டுப்பாட்டாளர்கள் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை கப்பல்களுக்கிடையே மாற்றி ஏற்றுதல் மற்றும் அவற்றின் வர்த்தகத்தினை மேற்பார்வை செய்வது தொடர்பான தமது நாடுகளின் தேசிய மூலோபாயங்களை காட்சிப்படுத்தினர்.

வர்த்தக பயன்பாடு மற்றும் இராணுவ பயன்பாடு ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தக்கூடிய மற்றும் மென்பொருள் விருத்தி, விமானப் போக்குவரத்து, மருத்துவம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புத்தாக்கங்களை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கக்கூடிய 'இரட்டை பயன்பாடுடைய' பொருட்கள் அல்லது தொழில்நுட்பங்கள் அனைத்தும் இதில் அடங்குகின்றன.

நிகழ்வில் உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங், "சுமூகமான முறையில் வர்த்தகத்தை மேற்கொள்ளல் மற்றும் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்தல் ஆகிய இரண்டிற்குமிடையே ஒரு




சமநிலையை அடைவது சவாலான விடயமாகும். நாடுகள் பொருளாதார வளர்ச்சியை பேணிவளர்ப்பது மட்டுமன்றி, உலக சந்தையில்

போட்டியிடுவதற்கான தமது போட்டித்திறனையும் விருத்தி செய்யக்கூடிய வகையில் சட்டபூர்வமான வர்த்தக செயற்பாடுகளுக்கு அனுகூலமானதும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்றதுமான வர்த்தக சூழல்களை வளர்ப்பதற்கு அமெரிக்கா தனது பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுகிறது." எனக் குறிப்பிட்டு வலுவான வர்த்தகத்திற்கு அவசியமான சமநிலையை வலியுறுத்தினார்.

சிங்கப்பூரின் வர்த்தக மேன்மைக்கான மத்தியநிலையம் மற்றும் அமெரிக்க வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்களது கருத்துக்களும் மற்றும் CRDF குளோபல், மெக்லாரன்ஸ் மெரிடைம் அகடமி, வங்கியாளர்களின் வர்த்தக நிதிச் சங்கம் மற்றும் Hub Operators Association ஆகிய அமைப்புகளைச்

சேர்ந்த இலங்கை நிபுணர்களது கருத்துக்களும் இம்மன்றத்தில் பகிரப்பட்டது.

தொடர்ந்து மாற்றமடையும் ஒரு ஒழுங்காக்கல் பரப்பின் சிக்கல்களை திறம்பட கையாள்வதற்கான வலுவான இணங்கியொழுகும் நடைமுறைகளை நிறுவுவதற்கு தேவையான மதிப்புமிக்க குறிப்புகளையும் உத்திகளையும் இவ்வல்லுநர்கள் வழங்கினர்.

## பால் புரைக்கேறியதில் சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், இணுவில் கிழக்குப் பகுதியில் பிறந்து 40 நாட்களேயான சிசு ஒன்று பால் புரைக்கேறியதில் புதன்கிழமை (26) உயிரிழந்துள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இணுவில் பிரதேசத்தைச் சேர்ந்த தாயொருவர் தனது மகளுக்குத் தாய்ப்பால் கொடுத்துப் படுக்கையில் வைத்துள்ளார். சிறிது நேரத்தின் பின்னர் சிசு அசைவற்று கிடப்பதனை அவதானித்த பெற்றோர், அதை தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அதன்போது, சிசு ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சிசுவின் மரணம் தொடர்பில் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் பால் புரைக்கேறியமையினாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## மலசலக்கூடத்தில் இருந்து இரண்டு சடலங்கள் மீட்பு

செ.திவாகரன், டி.சந்ரு

நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பிடத்தில் உள்ள பொது மலசலக்கூடத்தில் இருந்து இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா-பிளாக்பூல், ருவன்எலியாவைச் சேர்ந்த 71 வயதுடைய முதியவர் ஒருவரின் சடலம் புதன்கிழமை (26) இரவும், பொகவந்தலாவை-ஆரியபுரவைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவரின் சடலம் வியாழக்கிழமையும் (27) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலசலக்கூடத்தில் இருவர் விழுந்து கிடந்ததை அவதானித்த பொதுமக்கள் 1990 அவசர நோயாளர் காவு வண்டி சேவைக்கு வழங்கிய தகவலை



அடுத்து ஸ்தலத்துக்கு விரைந்தவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எரிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்பு

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - உடுவில் தெற்கு பிள்ளையார் கோயில் அருகே உள்ள காணியிலிருந்து புதன்கிழமை (26) மோட்டார் சைக்கிளொன்று எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் இனங்காணப்படாத நிலையில்,

காணி உரிமையாளரால், குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த சுன்னாகம் பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## இராஜாங்க அமைச்சருடன் ஆளுநர் சந்திப்பு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனுக்கும் இடையிலான சந்திப்புபுதன்கிழமை(26) இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில், கதிர்காம பாதயாத்திரையில் ஈடுபடும் பக்தர்களுக்காக உகன தேசிய பூங்கா வாயிற் கதவுகளைத் திறக்கும் திகதிகள் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோனுடன் பாதுகாப்பு அமைச்சில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலின் பின்னர், ஜூன் 30ஆம் திகதி காலை 6 மணிக்கு வாயிற்கதவுகளைத் திறப்பதற்குத் தயாராகுமாறு அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்ட செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதைந்த லொறி

ஹட்டன் பகுதியில் மண் மேடு சரிந்து விழுந்ததில் லொறியொன்று சேதமடைந்துள்ளது.

இந்த லொறி கடை ஒன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு, பொருட்களை கடைக்கு இறக்கிக் கொண்டிருக்கும் போது அருகில் இருந்த மண் மேடு சரிந்து லொறி மீது விழுந்துள்ளது.



## இலஞ்சம் பெற்ற கிராம அதிகாரி கைது

பெண் ஒருவரிடம் 25,000 ரூபாவை இலஞ்சமாக பெற்றதாக ஹீரஸ்ஸகல கிராம அதிகாரியை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகள் குழு புதன்கிழமை(26) கைது செய்துள்ளது.

பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், கிராம உத்தியோகத்தர் அலுவலக வளாகத்தில் வைத்து அவரிடம் பணத்தைக் கையளிக்கும் போதே ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாடு செய்த பெண்ணின் மகனின் வீட்டிற்கு மின்சாரம் வழங்கிய சம்பவம் தொடர்பில் கிராம அதிகாரி இந்தப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## நற்செய்திக்கு பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி



ஆ.ரமேஸ்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை (26) அன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையை வரவேற்று, நுவரெலியா மாநகரில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்து மகிழ்ச்சி ஆராவாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையின் பிரதான உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறு சீரமைப்பு பேச்சு வார்த்தைகளையும் உடன்படிக்கையையும் செய்து கொண்ட பின்னர், நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் நற்செய்தி என்றே பட்டாசு வெடித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன்போது, முன்னாள் மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருணாரத்ன, ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டுள்ளனர்.




## விற்பனைக்கு

கொழும்பு-2 இல் TRI-ZEN LUXURY அடுக்குமாடி குடியிருப்பில், 537 சதுர அடி, ஒரு படுக்கை அறை, ஏசி, சுடு நீர், (pantry cupboard) வசதியுடன், கூடிய வீடு விற்பனைக்கு உண்டு,

தாமரை கோபுரம், பேரே ஏரி, அல்டேயார், கடல், நீச்சல் தடாகம், குழந்தைகள் விளையாடும் பகுதி, உணவகத்துடன் கூடிய roof top பொழுதுபோக்கு பகுதி, விழா அறைகள், உடற்பயிற்சி கூடம், நடைப் பாதையுடன் கூடியது. 48 மில்லியன் ரூபாய். 2 மாதங்களுக்குள் தயாராக உள்ளது.

வாங்குபவர்கள் மட்டும் 0777- 315500க்கு அழைக்கவும்.

கொழும்பு 8, குருப்பு வீதி, 16.75 பேர்ச், உயர் ரக காணி, சுத்தமான காணி உறுதி பத்திரம், அமைதியான சுற்றுச்சூழல், காணிக்கு முன்பாக A 30 அடி வீதி உள்ளது. குழாய் தண்ணீர், 3 பேஸ் ன்சாரம், கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வீட்டுத்திட்டம். மாடிவீட்டுத் திட்டங்களை அமைப்பதற்கான முன்மொழிவு 1 பேர்ச் 6 மில்லியன் ரூபாய். விலை பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள - 0777-315500


## மூன்றாம் பாலினத்தவர்கள் நடைபவனி

க.அகரன்

வவுனியாவில் மூன்றாம் பாலினத்தவர்களின் உரிமைகளை வலியுறுத்தி அவர்களையும் மனிதர்களாக எண்ண வேண்டும் என கோரிக்கை விடுத்து நடைபவனி புதன்கிழமை (26) இடம்பெற்றது. இந்த நடைபவனி, வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து நகர் வழியாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வரை சென்று அங்கு நிறைவு பெற்றிருந்தது. சுமார் 50 பேர் வரையில் இந்த நடைபவனியில் கலந்து கொண்டதோடு, யாழ். சங்கம் என்கின்ற இந்த மூன்றாம் பாலினத்தவர்களுக்காக பணியாற்றுகின்ற அமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது.





# மரணத்துக்கு தங்கள் இதயங்களை தயார் செய்யும் மக்கள்

நோய்களுக்கும் துக்கங்களுக்கும் மருந்து இல்லாத நாடு எந்த வகையிலும், மனிதர்கள் வாழ ஏற்ற நாடாக இருக்காது என்பது முழு உண்மை. கண்டி தேசிய வைத்தியசாலை மற்றும் பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் “லிக்னோகைன்” என்ற தடுப்பூசிக்குப் பல மாதங்களாக கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மருந்துகள் பற்றாக்குறை மற்றும் மருந்துகள் கிடைக்காமையால் குடிமக்களின் உயிருக்குக் கடுமையான ஆபத்தில் உள்ளது. இது ஓர் ஆபத்தான நிலை. மக்களின் உயிரை இப்படி ஆபத்தில் ஆழ்த்த யாருக்கும் உரிமை இல்லை. மேலும் அந்த கொடூரமான சூழ்நிலையைக் குருட்டுக் கண்களால் பார்க்க எந்த அதிகாரிக்கும் உரிமை இல்லை.

தாங்க முடியாத வரிச் சுமையால் இந்நாட்டு மக்கள் தவித்து வருகின்றனர். அரசாங்கம் தனக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நாட்டின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள வரிகளை விதிக்கிறது.

தொடர்ச்சியான மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயுவின் தொடர்ச்சியான விநியோகம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் ஆகியவற்றிற்கான தேவையான செலவினங்களைக் கண்டறிவதற்கான முக்கிய வழிகளில் வரி வருவாய் ஒன்றாகும். மருந்துகளின் இறக்குமதியும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். ஆனால், மருந்து தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான மருந்துகளுக்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

உள்ளூர் மயக்க மருந்துக்குப் பயன்படுத்தப்படும் தடுப்பூசி இன்மையால் கண்டி தேசிய வைத்தியசாலையில் பல்வேறு சிகிச்சைகளுக்காக வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் லிக் நொகைன் தடுப்பூசி கிடைக்காததால் சிறு குழந்தைகளின் அறுவைச் சிகிச்சைக்கு கடும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் கிடைக்காத மருந்துகள் பெரும்பாலும் மருத்துவமனையைச் சுற்றியுள்ள மருந்தகங்களில் கிடைக்கும்.. மருத்துவமனை ஊழியர்கள் சிலர் மருத்துவமனை மருந்துகளைத் தெருவோர கடத்தல்காரர்களிடம் ஒப்படைப்பது ஒன்றுக்கு மேற்பட்ட முறை கண்டுபிடிக்கப்பட்டது. கடத்தல்காரர்களும் இந்த மருந்துகளை அதிக விலைக்கு விற்கின்றனர். உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, கடத்தல்காரர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு சொத்துக்களை விற்கவோ அல்லது போதைப் பொருட்களை வாங்கவோ மக்கள் ஆசைப்படுகிறார்கள். அத்தகைய சொத்துக்கள் இல்லாதவர்கள் வாழ்க்கையின் மீது ஆசையை விட்டுவிட்டு மரணத்திற்கு தங்கள் இதயங்களைத் தயார் செய்கிறார்கள்.

அப்படிப்பட்ட சபிக்கப்பட்ட சூழலில்தான் நாம் வாழ்கிறோம். அத்தகைய விதிக்கு நாம் அடிபணியக்கூடாது. மக்களின் உயிரைக் காப்பாற்ற, சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய திறமையின்மை, மோசடி, ஊழல், முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத கடத்தல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இந்த விடயம் அனைத்து விடயங்களுக்கும் முன்னதாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நாங்கள் மிகச் சின்னசின்ன விடயங்களில், வெற்றிபெற்றாலே போதும், மிகவும் களிப்பு அடைகின்றோம். இத்தோடு நாங்கள் நின்றுவிடக்கூடாது.

தொடர்ந்து அதே வழியில் சற்று மேலோங்கி, விரிந்த பயணத்தில் மேல்நோக்கிச் செல்வீர்களாவீர். அப்பொழுது, நீங்களே உணராத மகா வல்லமையைப் பெற்றவர்களாவீர்.

உயர்நிலைக்கு வந்தவர்கள் உறங்குவதில்லை. சின்னத் தீப்பொறியின் வியாபகம், பெரும் தீயை உண்டுபண்ணிவிடுகின்றது. எனவே, மனம் என்பதுகூட, ஒரு தீவிர இயங்கு சக்தி என்பதை உணர்வீர்களாக.

நல்ல விடயங்களில் மட்டும் நாட்டம், நெஞ்சத்தைக் குடையும் அல்லது, சிந்தையைச் சிதைக்கும் எதையும் மூளைக்குள் செலுத்த வேண்டாம். அமைதியாகவும் நிதானமாகவும் செய்யவேண்டிய கருமங்களில் உண்மையாகவே, ஈடுபாட்டுடன் செய்தாலே போதும், நீங்கள் நவ மனிதன் தான்.

எந்தக் கவலைகளும் எமக்கு வேண்டாம். எப்படி வாழ்வை மகிழ்ச்சிகரமானதாக உருவாக்குவது என்பதிலேயே தீவிர கவனத்துடன் இருங்கள். உங்களுக்கு நீங்களே எஜமான்தான்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 4

# இலங்கையின் மதச்சார்பின்மைக்கான சவால்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த ஒரு நூற்றாண்டுகால இலங்கை அரசியலில் பௌத்த மதத்தின் வகிபாகம் பெரிது. குறிப்பாகக் கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலங்கைச் சமூகத்தின் அசைவியக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் தீர்மானகரமான சக்தியாக பௌத்தம் அதியுச்ச வளர்ச்சியைக் கண்டுள்ளது. இது இலங்கையின் பல்லின பல்பண்பாட்டுத் தன்மையைச் சவாலுக்குள்ளாக்கியுள்ளது.

பௌத்தம் இலங்கையின் அரச பாதுகாக்கப்பட்ட மதமாக மாற்றப்பட்டது அதன் நவீனத்துவ மறுசீரமைப்பில் ஏற்பட்ட கடைசி முக்கிய வளர்ச்சியாகும். 1948இல் அரசியல் சுதந்திரத்திற்குப் பின் ஆரம்பமான தசாப்தங்களில் இது நிகழ்ந்தது. இந்த மாற்றம் அரசுக்கும் பௌத்தத்திற்கும் மதச்சார்பற்ற சக்திக்கும் ஆன்மீக சக்திக்கும் இடையே நெருங்கிய கூட்டு வாழ்வு இருந்த கொலனித்துவத்திற்கு முந்தைய முன்னுதாரணத்திற்குத் திரும்புவதைக் குறித்தது.

1950களின் முற்பகுதியில் தொடங்கிய இலங்கையின் நவீன பௌத்தத்தின் கொலனித்துவத்திற்குப் பிந்தைய மாற்றமானது இருவழி செயல்முறையாக இருந்தது. முதலாவதாக, அது சிங்களப் பெரும்பான்மை தேசியவாதத்தின் மேலாதிக்கக் கருத்தியலாக வெளிப்பட்டது.

அது அரச கொள்கையையும் பின் கொலனித்துவ இலங்கை அரசின் தன்மையையும் கூட தீர்மானிக்கிறது. இரண்டாவதாக, முதலாவதாக, பௌத்த சமூகத்தால் பௌத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட அடையாளக் குணாம்சம், கொலனித்துவ நீக்கம் மற்றும் அரசியல் இறையாண்மையைப் பாதுகாப்பது என்ற இலட்சியத்தின் நியாயமான இணைப்பாகும். 1972இல் பௌத்தம் இலங்கையின் ‘முக்கிய மதமாக’ அறிவிக்கப்பட்டபோது இந்த நிலைப்பாடு அரசியலமைப்பு மயமாக்கப்பட்டது.

1972இல் இலங்கை தனது குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்றியபோது, நாட்டின் தலைவர்கள் பௌத்தத்திற்கு ‘முக்கிய அந்தஸ்து’ வழங்கினர். இந்த சிறப்புரிமை 1978 அரசியலமைப்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது, இது நாட்டின் குடிமக்களின் மத சுதந்திரத்திற்கும் உத்தரவாதம் அளிக்கிறது.

2007இல், ஒலி மாசுபாடு தொடர்பான தீர்ப்பின் ஒரு பகுதியாக, பௌத்தர்களில் பெரும்பான்மையானவர்கள் இப்போது தங்கள் மதத்தின் முதன்மையான அந்தஸ்தைப் புனிதமாகக் கருதினாலும், தீவு ஒரு ‘மதச்சார்பற்ற நாடு’ என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால், நடைமுறையில் இலங்கை மதச்சார்பற்ற நாடல்ல என்பதை நிகழ்வுகள் காட்டுகின்றன.

இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் மதச்சார்பின்மை சாத்தியமா என்ற வினா முக்கியமானது. குறிப்பாக மதச்சார்பின்மை என்ற எண்ணக்கரு ஐரோப்பாவில் புரட்டஸ்தாந்தின் வளர்ச்சியுடன் தோற்றம் பெற்று 18ஆம் நூற்றாண்டில் முன்னிலைக்க வந்தது. அடக்குமுறை முடியாட்சிகளுடன் தொடர்பு கொண்ட பரவலாக ஊழல் நிறைந்த கத்தோலிக்க திருச்சபை மற்றும் தேவாலயத்தை அரசிலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதைச் சாத்தியப்படுத்த அரசுகளை மதச்சார்பற்றவையாக மாற்ற இயலுமானது. ஆட்சியாளர்களும் ராஜ்யங்களும் மதத்தின் இன்றியமையாத புரவலர்களாகச் செயல்பட்ட தெற்காசியாவில் இதேபோன்ற ஏற்பாடு சாத்தியமா என்ற வினா இன்றளவும் வினவப்படுகிறது. 1972இல் இந்தியா தன்னை ‘மதச்சார்பற்ற நாடு’ என்று அறிவித்தது.

பெரும்பான்மையான சிங்களவர்கள் முக்கியமாக பௌத்தர்களாகவும், தமிழர்கள் பிரதானமாக இந்துக்களாகவும் இருந்த போதிலும், இரு குழுக்களுக்கிடையில் கிட்டத்தட்ட மூன்று தசாப்த கால மோதலுக்கு இனப் பிளவுகள் வழிவகுத்தன. பௌத்த தேசியவாதிகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அணி திரட்ட மதத்தைப் பயன்படுத்தினர்.

புலிகள் சில சமயங்களில் பௌத்த பிக்குகளைக் கொன்றனர், வழிபாட்டுத் தலங்களைத் தாக்கினர். ஆனால், இலங்கைத் தீவின் மோதல் ஒரு மதப் போர் அல்ல. அது இனத்துவத்தை மையமாகக் கொண்டது.

ஆனால், பௌத்தம் அதைத் தனது இருப்புக்கும் அரசியல் வளர்ச்சிக்கும் பயன்படுத்தியது. ஆனால், போருக்குப் பிந்தைய முரண்பாடுகளில் மதம் பிரதான இடம் வகிக்கிறது. குறிப்பான முஸ்லிம் விரோத உணர்வின் மையமாகப் பௌத்த இஸ்லாம் மோதலைக் கருதவியலும்.

இந்துத்துவாவைப் போன்றே அடுத்தடுத்து வரும் சிங்களத்வா சித்தாந்தம், இலங்கை சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது சிறுபான்மையினரே பெரும்பான்மை சமூகத்தின் துன்பங்களுக்கு காரணம், தீவு ஒரு ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பைப் பேண வேண்டும் என்ற வலியுறுத்தல், மேலும் அதிகாரப் பகிர்வுக்கு மாறாக, அதன் ஒன்பது மாகாணங்களையும் பெரும்பான்மையான பௌத்தர்களாக்க வேண்டும் என்ற அபிலாஷைகள் இந்தக் கருத்தியலிலிருந்து உருவாகின்றன.

இங்குக் கவனிக்க வேண்டியது யாதெனில், அரசியல் உடன்பாடு கொண்ட தீவிர முற்போக்கான பௌத்த இயங்கியலானது அதன் செயற்திட்டத்தை எந்த குறிப்பிடத்தக்க அரசியல் விளைவுகளுக்கும் கொண்டு செல்லாமல் மறைந்து வெகு காலத்திற்கு முன்பே பௌத்த பிரதான நீரோட்டத்தில் மறைந்தது ஏன்? மார்க்சியத்தால் உருவாக்கப்பட்ட தீவிர துறவிகள் கூட சமூகத்திற்கும் தேசியத்திற்கும் இடையிலான தொடர்பைப் பிரிக்கவில்லை அல்லது மறுபரிசீலனை செய்யவில்லை. சமத்துவமின்மை பற்றிய சமூகப் பிரச்சினைக்கான அர்ப்பணிப்பின் அரை மனதுடன் தெளிவற்ற வரையறுக்கப்பட்ட உச்சரிப்பு அவர்களுடையது.

முரண்பாடாக, இந்த தீவிர துறவிகள் அனைவரும் இலங்கை பௌத்த பிக்குகளின் உயர் சாதி சகோதரத்துவமான கண்டியின் சியாமிய சகோதரத்துவத்தைச் சேர்ந்தவர்கள். சாதியால் பிளவுபட்ட சிங்கள சமூகத்திற்குள் சமூக சமத்துவத்திற்கான எந்தவொரு சமூக இயக்கத்துடனும் அவர்கள் யாரும் இயல்பாக இணைக்கப்படவில்லை. தொடக்கத்தில், கொலனித்துவ காலத்தின் பிற்பகுதியில் இலங்கையில் இடதுசாரிகள் தலைமையிலான தொழிலாள வர்க்க இயக்கங்களைத் தவிர, அத்தகைய சமத்துவ சமூக இயக்கங்கள் எதுவும் இல்லை.

1948 சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் அரசியல் மாற்றம் அதன் ஜனநாயகத்தின் ஆழமான நெருக்கடியால் குறிக்கப்பட்டுள்ளது. இன மற்றும் கலாசார சிறுபான்மையினரின் அந்நியப்படுத்தல் மற்றும் இறுதியில் இன மோதல் மற்றும் பிரிவினைவாத உள்நாட்டுப் போரின் தோற்றம் ஆகியவற்றுடன் அரசின் பெரும்பான்மையான மாற்றத்தில் நெருக்கடி அதன் வெளிப்பாட்டைக் கண்டது.

இந்த ஜனநாயக நெருக்கடிக்குச் சிங்கள, பௌத்த தேசியவாத சித்தாந்தமும் சமூக சக்திகளும் வழங்கிய பங்களிப்பு முக்கியமானது. இந்த ஜனநாயக நெருக்கடிக்கு இலங்கையின் அரசியல் பௌத்தமானது சிங்கள பௌத்த பேரினவாத அகங்காரத்தின் வழியே பதிலளிக்க முனைந்துள்ளது. இது போருக்குப் பிந்தைய சூழலிலும் இனங்களுக்கிடையிலான சமாதான சகவாழ்வைச் சாத்தியமற்றதாக்கியுள்ளது.

1950கள் முதல் 1970 வரையிலான காலத்தில், புத்தமதத்தின் தேசிய மற்றும் அடையாள அரசியலின் மறு உறுதிப்படுத்தல் நிகழ்ந்தது. இது பெரும்பான்மை ஜனநாயகம் மற்றும் ஒற்றையாட்சியின் நியாயத்தன்மை மற்றும் புனிதத்தன்மையை மீண்டும் வலியுறுத்தியது.

குடியுரிமை பற்றிய பிரச்சினையில், பெரும்பான்மையான சிங்கள பௌத்தர்களுக்கான குழு உரிமைகள் பற்றிய அணுகுமுறையையும் சிறுபான்மை இனத்தவர்களுக்கான தனிப்பட்ட உரிமை பற்றிய அணுகுமுறையையும் மையப்படுத்திய பேச்சுக்களை அது கட்டமைத்தது.

இலங்கையின் 1972 மற்றும் 1978 அரசியலமைப்புகள், பௌத்தத்தின் இந்த தேசியவாத அரசியல் இறையியலை மீண்டும் உறுதிப்படுத்திய தருணங்கள், அரசியலமைப்பு வாதத்தின் தாராளவாத மற்றும் தாராளவாத முன்னுதாரணங்களின் கலவையுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

1980களில் நியாயமான போர் என்ற பௌத்த கோட்பாட்டை உருவாக்குவதற்கான ஒரு வாதத்தை அது உருவாக்க முயற்சித்தது.

சிங்கள-தேசியவாத சிந்தனையின் ஜாதிக சிந்தனைப் பள்ளியானது, இருபதாம் நூற்றாண்டின் பௌத்த அரசியல் தர்மத்தை மிகவும் தீவிரமான போர்க்குணமிக்க மறுகட்டமைப்பிற்காக வாதிட்ட முன்னணி அறிவுசார் நீரோட்டமாகும். ஜாதிக சிந்தனை குழுவின் அரசியல் கிளையான ஜாதிக ஹெல உறுமய, அதன் இளம் பௌத்த பிக்குகள் சிலரை நியமித்து, கொலனித்துவத்திற்கு முந்தைய சிங்களவர்களுடன் உரையாடலில் புத்தரின் மதச்சார்பற்ற கருப்பொருள்களில் அவ்வப்போது போதனைகளை மறுவிளக்கம் செய்து, நியாயமான போர் பற்றிய விரிவான பௌத்த கோட்பாட்டை உருவாக்கியது. அத்தகைய கோட்பாட்டின் கூறுகளைக் கொண்ட பௌத்த வரலாற்று நூல்கள் மறுபிரசுரம் கண்டன.

ஜாதிக சிந்தனை மற்றும் ஜாதிக ஹெல உறுமய புத்திஜீவிகள் இருவரும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் இந்துத்துவ நியாயமான போர்க் கோட்பாடுகளின் அதே அரசியல் ஈர்ப்பையும் விளைவையும் கொண்டிருக்கக்கூடிய நியாயமான போர்க் கோட்பாட்டை உருவாக்குவதன் மூலம் பௌத்த அரசியல் தர்மத்தின் தர்மபால திட்டத்தைப் புதுப்பித்து சமகாலமாக்க மிகவும் ஆர்வமாக இருந்தனர்.

சுவாரஸ்யமாக, இந்த முயற்சிகள் எதுவும் இதுவரை சிங்கள தேசிய திட்டத்திற்காக நியாயமான போர் பற்றிய எந்த பௌத்தக் கோட்பாட்டையும் உருவாக்கவில்லை, தேரவாத பௌத்தம், அதன் நவீன இலங்கை அரசியல் பதிப்புகளில் கூட, வன்முறை பற்றிய கருத்துகளில் நம்பகத்தன்மையை உற்பத்தி செய்வதற்கு எந்த மனோதத்துவ அல்லது நெறிமுறை ஆதாரங்களையும் கொண்டிருக்கவில்லை என்பதை நிரூபிக்கிறது.

இன்று புத்த மத அரசியல் தர்மத்தின் தீவிரமான போர்க்குணமிக்க மற்றும் வன்முறை சார்ந்த மறு உருவாக்கங்களை மக்கள் நிராகரிக்கும் சூழல் தோற்றம் பெற்றாலும் அது பிரதான நீரோட்டமாகவில்லை. ஆழமான அரசியல் நெருக்கடியில் பல இன சமூகத்தின் அரசியல் யதார்த்தங்களுக்குப்

பதிலளிக்கத் தவறிய பௌத்தத்தை மறுவிளக்கம் செய்ய முயல்வோர் மெல்லிய பன்மைத்துவத்தின் நெறிமுறை- அறிவுசார் வாதங்களை முன்வைத்து சகிப்புத்தன்மையின் பௌத்த நெறிமுறைக் கொள்கையின் அடிப்படையில் கட்டமைக்க முயல்கிறது. ஆனால் அதைப் பிரதான செல்நெறியாக்க நீண்டகாலம் பிடிக்கும்.

## கடிதங்கள்

### குளத்தினை புனரமையுங்கள்

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தினை முழுமையாகப் புனரமைப்பதற்குக் கடந்த பத்தாண்டுக் காலமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இக்குளத்தின் கீழான விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக குடமுருட்டிக்குளம் விளங்குகின்றது. இக்குளத்தின் அணைக்கட்டில் பல இடங்களில் சேதங்கள் காணப்படும் நிலையில், மழைக் காலங்களில் மண் மூடைகள் அடுக்கி குளத்தினை பாதுகாக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

குளத்தின் அணைக்கட்டினை முழுமையாகப் புனரமைப்பதன் மூலம் கூடுதலான நீரினை இக்குளத்தில் சேமிக்க முடியும். அக்கராயன் குளத்திலிருந்து மழைக் காலத்தில் வெளியேறும் நீர் குடமுருட்டிக் குளத்தினை நிரப்புவதன் காரணமாக குடமுருட்டிக் குளத்தினை அபிவிருத்தி செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

-நடராசா கிருஸ்ணகுமார்

## ரக்பி அணியின் தொலைத்தொடர்பாடல்

# பங்காளராக SLT-MOBITEL

SLT-MOBITEL, கண்டி திருத்துவ கல்லூரி அணியின் உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பாடல் பங்காளராக 2024ஆம் ஆண்டு ரக்பி பருவகாலத்துக்காக கைகோர்த்துள்ளது. தொடர்ச்சியான மூன்றாவது வருடமாக இவ்வாறு கைகோர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வளர்ந்து வரும் திறமைசாலிகள், விளையாட்டை ஊக்குவிப்பது மற்றும் தனிநபர்களுக்கு தமது முழுத் திறமைகளையும் வெளிப்படுத்த வாய்ப்பளிப்பது போன்றவற்றுக்கு தொழினுட்பத்தின் மாற்றியமைப்பு சக்தியினூடாக வலுவூட்டும் SLT-MOBITELஇன் அர்ப்பணிப்பு இதனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




2024 பாடசாலை ரக்பி பருவம் என்பது விறுவிறுப்பானதாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. திருத்துவ கல்லூரி அணி தமது திறமைகளையும், சிறந்த போட்டித்திறனையும் களத்தில் வெளிப்படுத்துவார்கள் என கருதப்படுகின்றது. இந்த கைகோர்ப்பின் அங்கமாக, விளையாட்டு வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ரசிகர்களுக்கு ரக்பி அனுபவத்தை மேம்படுத்துவதற்கான நவீன தொழினுட்ப மற்றும் இணைப்புத்திறன் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க SLT-MOBITEL முன்வந்துள்ளது. ஒப்பற்ற live streaming முதல் ரசிகர் ஈடுபாடு வரை, SLT-MOBITEL இனால் நாடு முழுவதிலும் ரக்பி ஆர்வலர்கள் மத்தியில் இந்த போட்டித் தொடரை நெருக்கமடையச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இளம் திறமைசாலிகளை ஊக்குவித்தல், ஒழுக்கப்பண்புகளை கட்டியெழுப்பல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறைகளை ஊக்குவித்தல் போன்றவற்றில் பாடசாலை விளையாட்டுகள் முக்கிய பங்காற்றுகின்றன என்பதில் SLT-MOBITEL நம்பிக்கை கொண்டுள்ளது. தேசத்தின் இளைஞர்களுக்கு வலுவூட்டி, சிறப்பான கலாசாரத்தை தோற்றுவிப்பது என்பதில் SLT-MOBITEL எப்போதும் தன்னை அர்ப்பணித்துள்ளது. தொலைத்தொடர்பாடல்கள் என்பதற்கு அப்பால் சென்றதாக இந்த உறுதிமொழி அமைந்திருப்பதுடன், நாடு முழுவதிலும் பாடசாலை விளையாட்டை ஊக்குவித்து ஆதரவளிப்பதில் நிறுவனம் தொடர்ந்தும் முக்கிய பங்காற்றி வருகின்றது.

# Forbes Marshall லங்காவின் அர்ப்பணிப்பு

சர்வதேச பதப்படுத்தல் தொழிற்துறைக்கு வலுப் பேணல் மற்றும் தன்னியக்கமயமாக்கல் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான Forbes Marshall Lanka Pvt Ltd, அண்மையில் 'Partnering KPI Sustenance' எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றையும், விசேட நிகழ்வையும் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வில், இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த பல்வேறு தொழிற்துறைகளின் 500க்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.




இரு தொழில்நுட்ப அமர்வுகளை இந்த நிகழ்வு உள்ளடக்கியிருந்ததுடன், அதில் ஒரு அமர்வு, KPI தீர்வுகளை தக்க வைத்துக் கொள்வதனூடாக நிலைபேறாண்மைக்கான வழிமுறையில் கவனம் செலுத்துவதாகவும், மற்றைய அமர்வு, டிஜிட்டல் தக்க வைப்பு சேவைகளில் கவனம் செலுத்துவதாகவும் அமைந்திருந்தது. ஸ்டீம் பொயிலர்கள் மற்றும் ஸ்டீம் உதிரிப்பாகங்கள் மற்றும் Control Instrumentation கட்டமைப்புகள் போன்றவற்றுக்கான சந்தை முன்னோடியாக Forbes Marshall Lanka திகழ்கின்றது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் லொஷான் பலயன்கொட தமது வரவேற்புரையின் போது, இலங்கையில் 30 வருடங்களுக்கு மேலான பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆதரவளித்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்திருந்தார். பல்கலைக்கழகங்களில் மூன்று ஸ்டீம் ஆய்வு கூடங்களை Forbes Marshall எவ்வாறு நிறுவியிருந்தது என்பது பற்றியும் அவர் விளக்கமளித்திருந்ததுடன், பட்டம் பயிலும் பொறியியலாளர்கள் அடங்கலாக, ஆயிரக் கணக்கான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு திறன் கட்டியெழுப்பல் அமர்வுகளை முன்னெடுத்திருந்தமை பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

Forbes Marshall இன் பணிப்பாளர் சத்யதியோ புரோஹித் விளக்கமளிக்கையில், பதப்படுத்தல் தொழிற்துறைகளின் பிரதான முன்னுரிமைகளாக உற்பத்தித் திறனை மேம்படுத்துவது மற்றும் கட்டணப் பட்டியல் செலவுகளை குறைத்தல் போன்றன அமைந்திருப்பதாக குறிப்பிட்டார். காலப் போக்கில், துறைசார் சூழல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அர்ப்பணிப்புகள் போன்றவற்றுடன் இவை மிகவும் சிக்கல்கள் நிறைந்ததாக அமைந்திருந்த போதிலும், Forbes Marshall தமது ஆழமான அறிவு மற்றும் பிரயோகங்களினூடாக ஆலைகளுக்கு வினைத்திறனில் நியம மட்டங்களை எய்துவதற்கு அவசியமான தயாரிப்புகள் மற்றும் டிஜிட்டல் தக்க வைப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதாக குறிப்பிட்டார்.

Forbes Marshall இன் டிஜிட்டல் செயற்பாடுகளுக்கான தலைமைத்துவ அணி செயற்பாட்டாளர் யஷஸ்வி சஹாஜ்பால் குறிப்பிடுகையில், தமது டிஜிட்டல் தக்க வைப்பு சேவைகளினூடாக 600க்கும் அதிகமான ஆலைகளுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதுடன், தமது வாடிக்கையாளர்களின் KPIகளை மேம்படுத்துவது தொடர்பில் வெற்றிகரமான கதைகள் மற்றும் ஆய்வுகளை பகிர்ந்திருந்தார். அதன் செயன்முறை நிபுணர்கள் தரவுகள் மற்றும் பகுப்பாய்வுகளில் கவனம் செலுத்தி, சரியான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில் தம்மை ஈடுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டார். Forbes Marshall உடன் கைகோர்க்குமாறு நிறுவனங்களுக்கு அவர் அழைப்புவிடுத்திருந்தார்.

Forbes Marshall International PTE Ltd, Singapore இன் முழு உரிமையாண்மையின் கீழ் இயங்கும் துணை நிறுவனமாக Forbes Marshall Lanka Pvt Ltd (FML) திகழ்வதுடன், 1992ஆம் ஆண்டு முதலீட்டு சபையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கையில் ஸ்டீம் பொயிலர்கள் மற்றும் ஸ்டீம் சாதனங்கள் மற்றும் Control Instrumentation கட்டமைப்புகளுக்கு சந்தை முன்னோடியாக FML திகழ்கின்றது. 500க்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதுடன், செயன்முறை மற்றும் வலு வினைத்திறன் போன்றவற்றினூடாக உள்நாட்டு தொழிற்துறைக்கு ஆதரவளிக்கின்றது. இதனூடாக, உயர் கட்டமைப்பு தங்குதிறனுடன் அதிகளவு சிக்கனமான தீர்வுகளை எய்துகின்றது.

75 வருடங்களுக்கு மேலாக பதப்படுத்தல் தொழிற்துறைக்கு புத்தாக்கமான மற்றும் நவீனவலுச் சேமிப்பு மற்றும் தன்னியக்கமயமாக்கல் தீர்வுகளை வழங்குவதில் Forbes Marshall முன்னோடியாகத் திகழ்கின்றது. உலகளாவிய ரீதியில் 50க்கு மேற்பட்ட நாடுகளில் பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், ஆறு உற்பத்திப் பகுதிகள் மற்றும் 40,000க்கும் அதிகமான சதுர மீற்றர் தொழிற்சாலை இட வசதியையும் கொண்டுள்ளது. சராசரியாக, அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் தமது எரிபொருள் கட்டணத்தில் 1.5 சதவீதத்தை சேமித்துக் கொள்ள முடிகின்றது.

# Star Garments குழுமத்துக்கு வெள்ளி விருது

முதன் முறையாக முன்னெடுக்கப்பட்டிருந்த நிலைபேறான தொழிற்துறை அபிவிருத்திக்கான பசுமை தொழிற்துறை செயற்பாடுகளுக்கான சர்வதேச அமர்வின் போது, Star Garments குழுமம் ("Star") கட்டுநாயக்கவில் கொண்டுள்ள தனது புத்தாக்க நிலையத்துக்கு "தொழிற்துறையில் வலுச் சிக்கனம்" எனும் பிரிவில் வெள்ளி விருதை சுவீகரித்திருந்தது. உலகின் முதலாவது 'Passive house factory building' ஆக அமைந்திருப்பதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் காணப்படும் முதலாவது 'Passive House Design' ஆகவும் இது அமைந்துள்ளது. பிந்திய LEED V4 இன் கீழ் சான்றளிக்கப்பட்ட முதலாவது LEED Platinum building ஆகவும் இது அமைந்துள்ளது.

இந்த நிகழ்வு தொழிற்துறை அபிவிருத்தி சபை (IDB) மற்றும் தொழிற்துறை அமைச்சு ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2024 ஜூன் 20, 21 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

தொழிற்துறை என்பது பெருமளவில் வலு நுகரும் வாடிக்கையாளராக அமைந்துள்ளது. தனது பழைய தொழிற்சாலையை புதுப்பிக்கும் போது passive house கொள்கைகளை பயன்படுத்தி, அதன் வலுச் சிக்கனம் மற்றும் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பது தொடர்பில் புத்தாக்கமான வழிமுறையை Star



Garmentsபின்பற்றியிருந்தது. அதன் புத்தாக்க நிலையத்தில் இந்த கொள்கைகளை பின்பற்றியிருந்தமையினூடாக, வலுப் பாவனையில் 70 சதவீதம் வரையில் குறைவு ஏற்பட்டிருந்ததுடன், பாரம்பரிய "சிக்கனமான" நவீன தொழிற்துறைசார் கட்டிடத்துடன் ஒப்பிடுகையில்,பூஜ்ஜிய kWh/m2aவெப்ப கேள்வியை கொண்டதாக அமைந்திருந்தது. இதனூடாக பச்சைஇல்ல வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் தொழிற்பாட்டு செலவுகள் பெருமளவில் குறைக்கப்பட்டிருந்தன. மேம்படுத்த உள்ளக சூழல் தரம், ஊழியரின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரத்தை மேம்படுத்தல் போன்றவற்றை ஏற்படுத்தியிருந்தது.

Passive house design இனால் சிறந்த அகத்துறிஞ்சல், காற்றழுத்தம் மற்றும் வெப்ப மீட்சி கட்டமைப்புகள் போன்றன உறுதி செய்யப்பட்டு, வலு நுகர்வை குறைத்து, வெப்பவலயங்களில் தொழிற்துறைசார் கட்டிடங்களுக்கு புதிய நியமங்களை ஏற்படுத்தியுள்ளது. Star இன் புத்தாக்க நிலையத்துக்கு, 2020 AIA NewYork (AIANY) நிலைபேறாண்மைக்கான மெரிட் விருது வழங்கப்பட்டதுடன், 2021 Passive House சர்வதேச விருதும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2017ஆம் ஆண்டில் புத்தாக்க நிலையத்தை நிறுவியிருந்ததை தொடர்ந்து, நிலைபேறான தொழிற்துறையாக திகழ்வதற்கு தொடர்ந்தும் முதலீடுகளை Star மேற்கொண்ட வண்ணமுள்ளது. இன்று அதன் எட்டு தொழிற்சாலைகள் LEED சான்றளிக்கப்பட்டவையாக அமைந்திருப்பதுடன், அதில் இரண்டு பிளாட்டினம் அந்தஸ்தைப் பெற்றுள்ளன. நான்கு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளி விருதையும் பெற்றுள்ளன. மேலும், காலநிலை மாற்றத்தை தடுக்கும் வகையில் பங்களிப்பை பெற்றுக்கொடுப்பதற்காக, விஞ்ஞான அடிப்படையிலான இலக்குகள் செயற்திட்டத்துக்கு (SBTi) Star தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், தனது சகல செயற்பாடுகளிலும் 5 வருடங்களாக காபன் நடுநிலையை பேணி வருகின்றது. 4.9 மெகா வாற்று கூரைமீதான சூரியமின் பிறப்பாக்கிகளில் முதலீடு செய்திருந்ததனூடாக, காபன் வெளியீட்டை குறைக்கும் செயற்பாடுகளையும் Star முன்னெடுக்கின்றது. தனது பாரிய தொழிற்சாலையில் biomass boilers பயன்படுத்த மாறியிருந்தது.

# குற்றவாளி

உங்கள் உயர் நீதிமன்றத்தில்
என்னை விசாரணை
செய்வதில்
உடன் படுகிறேன்...
எனது தரப்பில்
நானும்
உங்கள் தரப்பில்
எல்லோருமாக
வாதிடுவோம்...



பொய்த்து கிடக்கும்
உணர்வுகளில்
திட்டமிடும் நிலச்
சுரண்டல்கள்
யாருக்கும்
இப்போது
வெட்கமில்லை...

ஆடைப்
போர்வையில்
அம்மணமாகி
முகம் பார்க்கும் பொழுதுகளில்
மட்டும்
புன்னகைப்பதை
வழமையாக கொண்டவர்கள்
நாங்கள் தானே..?


ஆதலால்
தீர்ப்புவரும் வரை
வாதிடுவோம்...
வக்கிரம் பிடித்து
வாள் வீசுவோம்
எது எல்லாம் செய்ய முடியுமோ
அது எல்லாம் செய்வோம்...

நீங்கள் எழுதப் போகும்
தீர்ப்பில்
நான் மட்டுமே குற்றவாளி...
நான் மட்டுமே குற்றவாளி...
நான் மட்டுமே குற்றவாளி...

- காரையன் கதன்



# மனதிலே நிலைத்தவள்



மனதிலே நிலைத்தவள்
மலையென உயர்ந்தவள்
கனவிலே வதைத்தவள்
கவிதையாய் நிமிர்ந்தவள்...

மழலையாய்ச் சிரித்தவள்
மலரினும் மெல்லியள்
அழகிய விழிகளில்
ஆயிரம் உரைத்தவள்...

நிலவென உதித்தவள்
நினை வெலாம் நிறைந்தவள்
கலைகளின் கருவவள்
கண்கவர் மயிலவள்...

மழைமுகில்
வளர்த்தவள்
மதிமுகம்
படைத்தவள்
இழையினும்
மெல்லிய
இடையினால்
நெளிந்தவள்...



தென்றலாய்
எழுந்தவள்
தெம்மாங்கு தந்தவள்
வென்றிடுந் தமிழிலே
விளையாடி மகிழ்பவள்...

எந்தனை மயக்கினள்
இனியவள் ஆகினள்
சொந்தமாய் அமைந்திடின்
சொர்க்கமாம் உலகமே...

- கந்தவனம் கோணேஸ்வரன்

# கண்ணால கண்ணி வைச்சி போறாளே...

கரும்புத் தோட்டத்தில
கண்ணுரெண்ட
தொலைச்சனே
கருமாரியம்மன்
சாட்சியா
ஒன்னபாத்தேனே
செவந்த கன்னம்
சிவப்பாக
சிரிப்பாளே
சேத்துல நடந்த
சொகம் எனக்கு
அடியே என் மாமன் பெத்த
கடைக்குட்டி
மாரிமழை பெய்யுது-நீ
அசைஞ்சாலே
ஊர் முழுக்க மணக்குதடி
பூவாசம்
ஊதாகலர் சேலையில-நீ
நடந்தா
வாய்க்கா ஓரம்
கஞ்சி கொண்டு நீயும்
வந்தாயே வாடாத
நேசத்த தந்தாயே
உசுர எடுத்துக்கிட்டு
ஒய்யாரமா போறவளே
உறியில தயிராட்டம் ஒறைஞ்சி போனேனே
பாவம்தானே நானும் பச்சக் கிளியே
பாசம் வைச்சன் மோசம் பண்ணாத
கள்ளிமர முள்ளாநெஞ்ச தைக்காத
கண்ணால கண்ணி வைச்சி போறவளே...





- சம்பூர் சமரன்






### கதிர்காமத்துக்கான

# கானக பாதயாத்திரை ஞாயிறன்று ஆரம்பம்

**விபுலமாமணி வித்தகர்**
**வி.ரி.சகாதேவராஜா**
**ஒருங்கிணைப்பாளர் – யாழ்.சந்நதி – கதிர்காமம் பாதயாத்திரைக்குழு**

குன்று தோறாடும் குமரனைத் தரிசிக்கக் கதிர்காமத்திற்கான 2024 ஆம் ஆண்டுக்கான கானக பாதயாத்திரை ஞாயிற்றுக்கிழமை (30) காலை ஆரம்பமாகின்றது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி ஜூலை மாதம் 22 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

அதனை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (30) உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து பிரதம குரு சிவ ஸ்ரீ க.கு.சீதாராம் குருக்களின் விசேட அதிகாலை பூஜையுடன் கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படுகிறது.

இம்முறை காட்டுப் பாதை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜனின் வழிகாட்டலில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைக்கவிருக்கிறார்.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு,வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாகக் கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருகப் பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம். குறைந்தது ஆறு நாட்கள் பயணிப்பது வழமை.

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளைக் கடந்து, ஆறு நாட்களாகப் பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிக்கின்றனர்.

இப்புனித பாதயாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும், அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இருந்தே அதிகளவான யாத்திரீகர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்திற்கே நம்மைக் கூட்டிச் செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டுப் பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்குப் பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்பப் பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள்,









வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

காட்டுக்குள் இறங்கி விட்டால் அனைவரது சுய நாமங்கள் மறந்து “சாமி” என அழைக்கப்படுவது மற்றுமொரு மரபாகும்

இவை மட்டுமல்ல, இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல் காற்று, கச்சான் காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றைச் சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா, எத்தனை மனநிறைவான விடயங்கள். நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது. பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருகப் பெருமானே நேரடியாகப் பயணத்தில் அனைவரையும் அழைத்துச் செல்கிறான். இது மட்டும் உண்மை.

---

### நாடு முழுவதும் மரங்கள் நடும் திட்டத்தை ஆரம்பித்துள்ள

# லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனம்










லங்கெம் லங்கா பொது நிறுவனத்தின் விவசாயப் பிரிவான லங்கெம் அக்ரிகல்ச்சர், ஜூன் 5ஆம் திகதி உலகச் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, தொடர்ச்சியான மரநடுகை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தனித்துவமான திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் 1,300 பலா மரக்கன்றுகள் மற்றும் 200 மரக்கன்றுகள் உட்பட 1,500 மரக்கன்றுகளை நடுவதற்கு லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

நிறுவனத்தின் அடிப்படை நெறிமுறைகள் மற்றும் நீண்டகால நிலையான இலக்குகளுக்கு இணங்க, சுற்றுச்சூழல் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அவர்களால் வலியுறுத்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையர்களுக்கான போஷாக்கு மற்றும் கலாசாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இலங்கையில் உணவு பாதுகாப்பை அதிகரிப்பதில் பங்களிப்பதன் மூலம் நாட்டில் நிலையான மற்றும் ஆரோக்கியமான உணவை மேம்படுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தின் மற்றொரு நோக்கம், நிலையான விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை குறைப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

மலையகம் மற்றும் வடமேற்கு, வடமத்திய, வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு போன்ற 6 பிரதேசங்களை உள்ளடக்கிய இந்த மர நடுகை நிகழ்ச்சித் திட்டமானது கொழும்பு-10இல் உள்ள லங்கெம் தலைமை அலுவலகம் மற்றும் பன்னல லங்கேம் அக்ரிகல்ச்சர் மண்டபத்தில் மர நடுகை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம், பிராந்திய முகாமையாளர்கள், பிராந்திய நிறைவேற்று அதிகாரிகள், தொழில்நுட்ப விற்பனை பிரதிநிதிகள் மற்றும் லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் பிராந்திய கள அதிகாரிகள் மற்றும் இலங்கை விவசாய திணைக்களத்தின் பிரதிநிதிகள், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்று, முழு உலகமும் காலநிலை மாற்றம், குறைந்த மழை வீழ்ச்சி மற்றும் பல்வேறு பாதகமான விளைவுகளால் கடுமையான சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்கிறது என்பது தெளிவாகிறது.

இதனால், உணவுப் பாதுகாப்பை தவிர்க்க முடியாது. காலநிலை முரண்பாடுகள் மற்றும் குறைந்த மழை வீழ்ச்சி காரணமாக விவசாய உற்பத்தித்திறன் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் போதுமான உணவு உற்பத்தியும் சவாலுக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனம், இந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கையாக இந்தத் தொடர் மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்தது. கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டு, நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், கிராமப்புற சமூகங்களுக்கு இச்செடிகளை விநியோகிப்பதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பிற்கான தமது பொறுப்புணர்வை உருவாக்குவதே லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் நோக்கமாகும்.

மேலும், இந்நிறுவனம் இந்த மதிப்புமிக்க தாவரங்களை நடுவதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான அறிவு மற்றும் கருவிகளை வழங்கி கிராமப்புற சமூகத்தை மேம்படுத்தவும் பாடுபட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த லங்கெம் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஷாந்த ஜயமான்ன, உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள மரநடுகை வேலைத்திட்டம் இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு முக்கிய நடவடிக்கையாக அமையும். உணவு பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், “இந்த தனித்துவமான வேலைத்திட்டத்தின் மூலம், லங்கெம் அக்ரிகல்ச்சரின் நிலைத்தன்மை மற்றும் கிராமப்புற மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றில் ஆர்வம் நன்றாகவே பிரதிபலிக்கிறது. இதன் மூலம், காலநிலை மாற்றத்தை எதிர்ப்பதற்கும், பல்லுயிர் பெருக்கத்திற்கும், மண் வளத்தை வளர்ப்பதற்கும் நேரடியாக பங்களிக்கிறோம். இதன் மூலம் வளமான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு தேவையான ஆற்றலை வழங்குவதற்கு நாங்கள் உழைத்துள்ளோம் என்பதையும் குறிப்பிடலாம்.” என தெரிவித்தார்.

1964ஆம் ஆண்டு Royal Dutch Shell ஆல் ஒரு விவசாய இரசாயன உற்பத்தியாளர் மற்றும் விநியோகஸ்தராக நிறுவப்பட்ட லங்கெம் லங்கா பொது நிறுவனம் அதன் பின்னர் வண்ணப்பூச்சுகள், இரசாயனங்கள், நுகர்வோர் பொருட்கள், பூச்சி நாசினி கட்டுப்பாடு, ஹோட்டல்கள் மற்றும் பொதியிடல் துறைகள் போன்ற பல்வேறு வணிகங்களில் ஈடுபட்டுள்ளது.

இன்று, மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த 9 முன்னணி தொழில்களில் உள்ள 25 துணை நிறுவனங்கள் மூலம், லங்கெம் தனது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளருக்கு கொண்டு வர முடிந்தது. சீரடைந்து வரும் பொருளாதாரம், நிலையான எதிர்காலம் மற்றும் நல்ல சமுதாயம் ஆகியவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனம், வணிக வளர்ச்சி மற்றும் சிறந்த வாழ்க்கை முறைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் தனது செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

லங்கெமின் விவசாயப் பிரிவான லங்கெம் அக்ரி, 1964ஆம் ஆண்டு முதல் இலங்கையில் விவசாய இரசாயனத் துறையில் முன்னோடியாக இருந்து வருகிறது. விவசாயிகளின் நண்பன் என இலங்கையர்கள் மத்தியில் அறியப்படும் இந்நிறுவனம்,விவசாய இரசாயனங்கள், நெல், மரக்கறி விதைகள், உரங்கள் மற்றும் தாவர ஊக்கிகள் போன்ற மேம்பட்ட விவசாய தீர்வுகள் மற்றும் உற்பத்திகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.


மேலும், லங்கெம் அக்ரியின் அதிநவீன வேளாண் இரசாயன உற்பத்தி வசதிக்கு ஐஎஸ்ஓ 9001-2015 (தர முகாமைத்துவம்), ISO 14001-2015 (சுற்றுச்சூழல் முகாமைத்துவம்) மற்றும் ISO 45,001-2018 உடல்நலம் மற்றும் சுகாதார முகாமைத்துவம் உட்பட பல சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

லங்கெம் அக்ரியின் வணிகப் பிரிவுகள் விவசாய இரசாயனங்கள், நெல் விதைகள், காய்கறி விதைகள், உரங்கள், தாவர ஊக்கிகள் மற்றும் பிற தயாரிப்புகளாகும்.

விஞ்ஞான ரீதியிலான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலையான விவசாயக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதில் முன்னணி வகிக்கும் நிறுவனமாக, இலங்கையில் விவசாய உற்பத்தி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதில் லங்கெம் அக்ரி கணிசமான பங்கை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# சந்திப்பும் நூல் கண்காட்சியும்




பாவா செல்லத்துரை உடனான சந்திப்பும், நூல் கண்காட்சியும் விற்பனையும், ஹட்டன் நகர சபை கேட்போர் கூட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். இதனை மானுடம் அமைப்பு லண்டன் ஏற்பாடு செய்துள்ளது.

# 'நீண்ட இருட்டு' கவிதை நூல்

ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனையை சேர்ந்த கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் எழுதிய 'நீண்ட இருட்டு' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, எம்.எச்.பவுண்டேஷன் ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற வங்கியாளரும் கவிஞருமான ஏ.ஆர்.ஏ.சத்தார் தலைமையில், மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் எஸ்.எம்.எம்.ஜெமீல் நினைவரங்கில் புதன்கிழமை (26) நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் வை.எல்.அன்சார், வெண்ணிலா சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஏ.கப்பார், கவிஞர் மருதூர் மஃஜூன், கவிஞர் ஜமீல், ஆய்வாளர் ஏயெம் அம்றிதா, கவிஞர் றாபி, கவிஞர் முனாஸ், கவிஞர் டீன் கபூர், கவிஞர் முபாறக், கவிஞர் நௌபல், கவிஞர் மருதமுனையாளன் றபீக், கவிதாயினி கவிநுட்பம் பாயிஸா, கவிஞர் மருதமுனை ஹஸன், போன்றோருடன் பலரும் கலந்து கொண்டனர்.







# 'தூக்கணாங்குருவிகள்'

அ.அச்சுதன்

எழுத்தாளர் மூதூர் மொகமட் ராபியின் மூன்றாவது சிறுகதை தொகுப்பாகிய 'தூக்கணாங்குருவிகள்' நூல் வெளியீட்டு, கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை ( 23) இடம்பெற்றது.

வெளியீட்டு விழாவுக்கு, ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஜனாப் A R பரீத் தலைமை தாங்கினார்.

# 'கரும் பலகை' நாவல் வெளியீடு

வ.சக்திவேல்



மகுடம் பதிப்பகம் நடத்தும் நூலாசிரியர் மூ.தயாளனின் 'கரும்பலகை' நாவல் மற்றும் சிறுகதை மஞ்சரி 50ஆவது இதழ் வெளியீட்டு விழா நிகழ்வு மட்டக்களப்பு YMCA மண்டபத்தில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எ.நவரட்ணம் தலைமையில் சனிக்கிழமை (15) நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் தலைவர் வி.ரஞ்சித மூர்த்தி கலந்து கொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரா.முரளீஸ்வரன் மற்றும் ருத்ரமூர்த்தி யுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில், இலக்கிய வாதிகள் விரிவுரையாளர்கள் பொதுமக்கள் மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.







# 'செழுஞ்சுடர்' வெளியீடு

எம்.எப்.றிபாஸ்

எஸ்.நஸிறுதீனின் 'செழுஞ்சுடர்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் புதன்கிழமை(12) இடம்பெற்றது.

சாய்ந்தமருது சிஹாப்தீன் கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தேசிய தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா கலந்து கொண்டார். வைத்திய கலாநிதி எஸ்.நஜிமுதீன் தலைமையுரையினையும், தென்கிழக்குபல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.அப்துல் றஸாக் நூல் அறிமுகவுரையையும், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நயத்தலுரையையும், தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உதவி பதிவாளர் மன்சூர் ஏ காதர் விமர்சன உரையையும் நிகழ்த்தினர்.






டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, எயார்டெல் லங்காவை கையகப்படுத்துதல் பூர்த்தியடைந்துடன்

# ஒன்றிணைப்பு செயன்முறை ஆரம்பம்

தேவையான அனைத்து ஒழுங்குமுறை மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதல்களை தொடர்ந்து, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ("Dialog"), ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட் ("Axiata") மற்றும் பாரத்தி எயார்டெல் லிமிடட் ("Bharti Airtel") ("தரப்பினர்" அனைவரும் ஒன்றாக), ஆகியன பங்கு விற்பனை பரிவர்த்தனை வெற்றிகரமாக பூர்த்தியானது.

இந்த பங்கு பரிமாற்றத்தின் மூலம் டயலொக் நிறுவனம், பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடட்டின் ("Airtel Lanka") வெளியிடப்பட்ட 100% பங்குகளை கையகப்படுத்துகிறது.

இந்த பங்கு பரிமாற்றத்தின் பின்னர், டயலொக்கின் 73.75% பங்குகளை ஆசிஆட்டாவும், 10.355% பங்குகளை பார்த்தி எயார்டெல் நிறுவனமும் மிகுதி 15.895% பங்குகளை பொது மக்களும் உரிமை கொண்டாடுவர். கம்பனி சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளுக்கு அமைய எயார்டெல் லங்காவை தன்னுடன் ஒன்றிணைக்க டயலொக் முன்மொழிந்துள்ளது. இதன்படி, ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பாக டயலொக் திகழும்.

இந்த இணைப்பு, 2023 மே மாதத்தில் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது. இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும். இரண்டு முன்னணி நிறுவனங்களின் பலத்தையும் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைத்து, நாட்டின் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உலகத்தர டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கி, நாட்டின் டிஜிட்டல் சூழலமைப்புக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கவுள்ளன.

இணைப்பின் பின்னர், டயலொக் மற்றும் எயார்டெல் லங்கா ஆகியன வழமைபோலவே வாடிக்கையாளர்களுக்கு தமது சேவைகளை தொடர்ந்து அளிக்கும் அதேவேளை, அபரிமிதமான மதிப்பும் மற்றும் அதிசிறந்த இணைப்பு தீர்வுகளையும் அளிக்கும் நோக்குடன் இரு வலையமைப்புகளும் இணைந்து பணிகளை தொடங்கவுள்ளன.


"இந்த மைல்கல் டயலொக் மற்றும் எயார்டெல் லங்கா இடையிலான இணைப்பின் பூர்த்தியைக் குறிக்கின்றது. எயார்டெல் குழுவினரையும் அவர்தம் 3 மில்லியன் சந்தாதாரர்களையும் டயலொக் குடும்பமாகிய நாம் உளமார வரவேற்கின்றோம்.

இத்தருணத்தில் இப்பரிவர்த்தனையை இனிதே நிறைவேற்ற தம் ஒப்பில்லா ஆதரவை நல்கிய இலங்கை அரசாங்கம், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC), முதலீட்டுச் சபை (BOI), கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (CSE), இலங்கை மத்திய வங்கி (CBSL), ஆசி ஆட்டா மற்றும் பார்த்தி எயார்டெல் மற்றும் இதர பங்குதாரர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க தெரிவித்தார்.

"இம்மாறுதல்மிக்க பயணத்தை நாம் ஆரம்பிக்கும் இவ்வேளையில், நமது கவனம் இப்போது டயலொக் மற்றும் எயார்டெல் ஆகிய இரு நிறுவனங்களின் கூட்டு பலத்தைப் பயன்படுத்தி, இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் முன்னேற்றங்களை நிகழ்த்துவதன்மீது குவிந்திருக்கின்றது.

இந்த ஓர் இணைப்பு, பாரிய வளர்ச்சியை அடைய ஏதுவாக நம்மை நிலைநிறுத்துகிறது, மிகச் சிறந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் புதுமைக்காக மட்டுமின்றி, நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுவதற்கும் உதவுகிறது. இந்த வெற்றிகரமான மாற்றம் இணைப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் புதிய அடித்தளங்களை அமைப்பதற்கான நமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

அதிகளவான நவீன தொழில்நுட்பங்களை வழங்குவதன் மூலம், மாறிவரும் டிஜிட்டல் உலகத்தில் வணிகங்களையும் தனிநபர்களையும் சக்திவாய்ந்தவையாக மாற்றும் வகையில் புதிய அடைவுமட்டங்களை எட்டுவதில் நாம் காட்டும் அர்ப்பணிப்பை இந்த மூலோபாய நகர்வு வலியுறுத்துகிறது" என அவர் மேலும் தெரிவித்தார்.



# 'இரகசியங்களால் ஆன ஒற்றைவரிக்கோடு'









வி.சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் ரெட்ணம் சுவாகர் எழுதிய 'இரகசியங்களால் ஆன ஒற்றைவரிக்கோடு' எனும் நூல் வெளியீட்டு விழா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் புதன்கிழமை (26) மாலை இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் விசேட அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில், பிரதேச செயலக உயர் அதிகாரிகள் உதவிப்பிரதேச செயலாளர்கள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரச உத்தியோகத்தர்கள் இலக்கிய நண்பர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சென்னை

அ.தி.மு.க. போராட்டத்துக்கு

# பிரேமலதா ஆதரவு

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க.) சார்பில் கள்ளக்குறிச்சி

விஷச் சாராயம் அருந்தி மரணமடைந்தமை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) அரசைக் கண்டித்து சென்னை எழும்பூரில் வியாழக்கிழமை(27) நடந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேரில் சென்று ஆதரவு தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி-கருணாபுரம் பகுதியில் விஷச் சாராயம் அருந்திய 63 பேர் உயிரிழந்த விவகாரத்தில் அம்மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் இடைநீக்கம்; செய்யப்பட்டுள்ளனர். மேலும் மதுவிலக்கு அமுல் பிரிவு டிஜிபி மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



தற்போது சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், இவ்விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என கோரி அ.தி.மு.கவினர் நடத்திய உண்ணாவிரதப்போராட்டத்துக்கே பிரேமலதா விஜயகாந்த் நேரில் சென்று ஆதரவு தெரிவித்தார்.

சென்னை

உயிருடன் இருப்பவரை இறந்ததாக அறிக்கை;

# விளக்கம் கேட்டது உயர் நீதிமன்றம்

உயிருடன் இருப்பவரை இறந்ததாக அறிக்கை அளித்தமை தொடர்பாக வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை ஆணையர் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த தமிழரான கிருஷ்ணகுமார் என்பவரை, உறவினர்களுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கக் கோரி, அவரது உறவினர் தமிழக அரசின் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை ஆணையருக்கு விண்ணப்பித்திருந்தார். ஆனால், கிருஷ்ணகுமார் இறந்து விட்டதாக அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டுள்ளது. இதை மறுத்த கிருஷ்ணகுமாரின் உறவினரான நாகேஸ்வரி, கிருஷ்ணகுமார் உயிருடன் இருக்கும் நிலையில், அவர் இறந்து விட்டதாகக் கூறி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் உடனடியாக அவரை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி விடுதலை செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.




கர்நாடகா

# பெண் கேட்டு இளைஞன் மனு

கர்நாடக மாநிலம், கொப்பால் மாவட்டத்தின் விவசாய குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கடந்த 10 ஆண்டுகளாகப் பெண் தேடியும் கிடைக்கவில்லை எனவும் தனக்குப் பெண் தேடித் தருமாறும் ஆட்சியரிடம் மனு ஒன்றை அளித்துள்ளார்.

கொப்பால் மாவட்டம், கனககிரியில் உள்ள சமுதாய பவனில், மக்கள் குறை தீர் முகாம் நடந்தது. இதில், மாவட்ட ஆட்சியர் உட்பட உயர் அதிகாரிகள், பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்துள்ளனர்.

சில அடிப்படை வசதிகள் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளன. சில பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அக்கூட்டத்தின்போது, சங்கப்பா என்ற இளைஞர், மாவட்ட ஆட்சியரிடம் மேற்படி மனுவை வழங்கியுள்ளார்.

பிலிப்பைன்ஸ்

# 7 பேர் சுட்டுக்கொலை



பிலிப்பைன்ஸின் வடக்கு பகுதியில் உள்ள நியூவா எசிஜா மாகாணத்தில் நடந்த மோதலில் கிளர்ச்சிக் குழுவினர் 7 பேரை இராணுவம் சுட்டுக் கொன்றதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாண்டபங்கன் நகரில் புதன்கிழமை (26) பிற்பகல் புதிய மக்கள் இராணுவம் என்ற கிளர்ச்சிக் குழுவிற்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக இராணுவம் கூறி உள்ளது.

இந்த மோதலில் இராணுவத் தரப்பில் உயிரிழப்போ, காயமோ ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

# ரஷ்யாவில் ரயில் தடம் புரண்டு 70 பேர் காயம்




ரஷ்யாவில் ரயில் ஒன்றின் 9 பெட்டிகள் திடீரென தடம் புரண்டு விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதுடன், அவர்களில் 7 பேரின் நிலை கவலைக்குரியதாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது. எனினும், உயிரிழப்புகள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காத நிலையில் வடகிழக்கு பகுதியான கோமி பகுதியில் உள்ள வோர்குடா நகரிலிருந்து கருங்கடல் துறைமுக பகுதியான நோவோரோஸிஸ்க் நகர் வரையிலான 5 ஆயிரம் கி.மீ. தொலைவை இந்த ரயில் கடந்து சென்றுள்ளது.

நேபாளம்

கனமழையால் நேபாளத்தில்

# 14 பேர் பலி



நேபாளத்தில் பருவமழை தொடங்கியதிலிருந்து கனமழை, வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் மின்னல் தாக்கியதில் மொத்தம் 14 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான கனமழையால் அங்கு நிலச்சரிவுகளும், மின்னல் தாக்குதல்களும் ஏற்பட்டு வருகின்றன.

நிலச்சரிவுகளால், பொதுமக்களின் வாழ்க்கை, சொத்துகள், உட்கட்டமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகின்றன.

இதுபற்றி உள்விவகார துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய பேரிடர் ஆபத்து குறைப்பு மற்றும் மேலாண் கழகம் வெளியிட்டு உள்ள செய்தியில், நிலச்சரிவில் சிக்கி 8 பேரும், மின்னல் தாக்கியதில் 5 பேரும் மற்றும் வெள்ளத்தில் சிக்கி ஒருவரும் உயிரிழந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றுள்ளது.

ட்ரினிடாட்டில் வியாழக்கிழமை (27) நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான முதலாவது அரையிறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத் தொடரொன்றின் இறுதிப் போட்டிக்கு முதலாவது தடவையாக தென்னாபிரிக்கா தகுதி பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ரஷீட் கான், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, மார்கோ ஜன்சன் (3), ககிஸோ றபாடா (2), அன்றிச் நொர்கியா (2), தப்ரையாஸ் ஷம்சியிடம் (3) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 11.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 56 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 57 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, குயின்டன் டி கொக்கை பஸல்ஹக் பரூக்கியிடம் ஆரம்பத்திலேயே இழந்தபோதும், றீஸா ஹென்ட்றிக்ஸின் ஆட்டமிழக்காத 29 (25), அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரமின் ஆட்டமிழக்காத 23 (21) ஓட்டங்களோடு 8.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமேயிழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஜான்சன் தெரிவானார்.

# சதுரங்கத்தில் சாஹிரா பிரகாசிப்பு

வலய மட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் புத்தளம் சாஹிரா ஆரம்பப் பாடசாலையிலிருந்து 7, 9, 11 வயதுக்குட்பட்ட ஐந்து போட்டியாளர்கள் மாகாண மட்டப் போட்டிக்கு தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# முழங்காவில் சம்பியன்

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி தெற்கு வலய பாடசாலைகளுக்குடையிலான கடினபந்து கிரிக்கெட் தொடரில், முழங்காவில் மகா வித்தியாலயம் சம்பியனானது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை வென்றே முழங்காவில் மகா வித்தியாலயம் சம்பியனானது.




# பயிற்றுவிப்பாளர் சில்வர்வூட் இராஜினாமா

இலங்கை ஆண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கிறிஸ் சில்வர்வூட் இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் இலங்கையுடன் இணைந்த சில்வர்வூட்டின் கீழ், வேகப்பந்துவீச்சாளர்களான டில்ஷான் மதுஷங்க, அசித பெர்ணாண்டோ, மதீஷ பத்திரண, நுவான் துஷார ஆகியோர் பிரகாசித்ததுடன், 2022ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணத்தை இலங்கை கைப்பற்றியதோடு, 2023 ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்கும் சென்றிருந்தது.

இதேவேளை, கடந்தாண்டு சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில் ஒன்பதாமிடத்தைப் பெற்றிருந்த இலங்கை, இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலும் முதலாவது சுற்றுடனேயே வெளியேறியிருந்தது.



யூரோ:

# ஜோர்ஜியாவிடம் தோற்ற போர்த்துக்கல்

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரில், வியாழக்கிழமை நடைபெற்ற ஜோர்ஜியாவுடனான குழு எஃப் போட்டியில் போர்த்துக்கல் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்றது.

இதேவேளை புதன்கிழமை(26) நடைபெற்ற பெல்ஜியம், உக்ரேனுக்கிடையிலான குழு ஈ போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 28 ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.